RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 131 | மே.19 2026 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# முதல்அமைச்சரின் தனிச் செயலாளர்களுக்கு துறைகள் ஒதுக்கீடு

சென்னை, மே.19-

சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்ற தவெக தலைவர் விஜய், முதல் அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டார். தொடர்ந்து, 9 பேர் அமைச்சர்களாக அறிவிக்கப்பட்டனர். அவர்களுக்கான துறைகளும் சமீபத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்த நிலையில், முதல் அமைச்சர் விஜய் தலைமையிலான அமைச்சரவையில் இடம்பிடித்தவர்கள் இன்று முறைப்படி அமைச்சர்களாக பொறுப்பேற்றுக் கொண்டனர். மிகவும் அரசியல் அனுபவம் வாய்ந்தவரான செங்கோட்டையன், விஜய் முன்னிலையில் நிதியமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டார். தொடர்ந்து, ஆதவ் அர்ஜுனா, என்.ஆனந்த், ராஜ்மோகன், அருண்ராஜ் உள்ளிட்ட அமைச்சர்களும் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

இந்தநிலையில், முதல் அமைச்சர் விஜய்யின் 4 தனி செயலாளர்களுக்கும் துறைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:




செந்தில்குமார்

நிதி, உள்துறை, மதுவிலக்கு, நகராட்சி நிர்வாகம், தொழில்கள்,கலால்,பொது, நகராட்சி நிர்வாகம், குடிநீர் வியோகம், எரிசக்தி, தொழில், முதலீட்டு மேம்பாடு, வணிகத்துறை, நெடுஞ்சாலை, மக்கள் நல்வாழ்வுத்துறை. விஜிலென்ஸ் கமிஷன்,பொதுப்பணித்துறை, சிறு துறைமுகங்கள், குடும்ப நலம்,

லட்சுமி பிரியா

முதல் அமைச்சர் அலுவலக நிர்வாகம், பள்ளிக்கல்வி, உயர்க்கல்வி, வருவாய்த்துறை, நகர்புற, கிராமப்புற வளர்ச்சித்துறை, பஞ்சாயத்துறை, சமூக நலன் மற்றும் பெண்கள் அதிகாரமளித்தல் துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தபட்டோர் நலத்துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, மாற்று திறனாளிகள் மறுவாழ்வு, வீட்டு வசதி, சமூக நலன், மகளிர் மேம்பாடு, பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மை நலன்,

அண்ணாதுரை

இயற்கை வளம், நீர்வளம்,விவசாயிகள் நலம், போக்குவரத்து, தமிழ் வளர்ச்சி, சட்டத்துறை, வணிகவரி, இயற்கை வளம், நீர்வளம், வேளாண்மை, கால்நடை,மீன்வளம், கூட்டுறவு, உணவுத்துறை, கைத்தறி, ஜவுளி, காதி, சட்டசபை அலுவலகம், மனிதவளத்துறை, தமிழ் வளர்ச்சித்துறை , போக்குவரத்து, சட்டம், மனிதவள மேம்பாடு,

விஷ்ணு

சுற்றுலாத்துறை, வணிக வரி, பத்திரப்பதிவு துறை, இளைஞர் நலன், சிறப்பு திட்டங்கள் அமலாக்கம், சுற்றுலா, கலாசாரம், சிறு, குறு, நடுத்தர தொழில், தகவல் தொழில்நுட்பம், இளைஞர் நலம், விளையாட்டு, தொழிலாளர் நலம், திட்டம், சிறப்பு திட்ட அமலாக்கம், ஆகிய துறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மும்மொழி திட்டத்தை தமிழக அரசு ஏற்க கூடாது: வைகோ வலியுறுத்தல்

தஞ்சாவூர்: மே.19-

மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தஞ்சாவூரில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியது: சமூக நீதி, மதச்சார்பின்மை, ஜனநாயகம், பெண்கள் பாதுகாப்பு, தமிழக வாழ்வாதாரங்களை காக்கும் கடமை இவற்றில் எள்ளளவும் பிசகாமல் முதல்வர் விஜய் ஆட்சியை நடத்த வேண்டும்.



மத்திய அரசின் பி.எம். திட்டத்தையோ, மும்மொழி திட்டத்தையோ முந்தைய திமுக அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. அதே நிலைப்பாட்டை தான் இந்த அரசும் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். நீட் தேர்வு நிரந்தரமாக ரத்து செய்யப்பட வேண்டும்.

கேள்வித்தாள் வெளியான சம்பவத்தால், தேர்வு எழுதிய அனைவரும் மிகுந்த வருத்தத்துக்கு ஆளாகி உள்ளனர். இதற்கு பொறுப்பேற்று மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் ராஜினாமா செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் நியமனம் எப்போது? : விஜய்க்கு வானதி கேள்வி

### திருச்செந்தூர் கோயில் வசூல் வேட்டை குறித்து வேதனை

சென்னை: மே.19-

"திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் இன்று வசூல் வேட்டையால் புனிதத்தை இழந்து வருவது வேதனை அளிக்கிறது. இந்து சமய அறநிலையத்துறைக்கென்று அமைச்சரை நியமிக்காமல் காலம் தாழ்த்தி வரும் தமிழக முதல்வர் விஜய், விரைவில் துறை அமைச்சரை நியமனம் செய்து கோயில்களில் இதுபோன்று நடக்கும் சம்பவங்களை தடுத்து நிறுத்த வேண்டும்" என பாஜக தேசிய மகளிரணி தலைவர் வானதி சீனிவாசன் வலியுறுத்தியுள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "தமிழ்க் கடவுள் முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் வெற்றியின் அம்சமாகக் கருதப்படும் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் இன்று வசூல் வேட்டையால் புனிதத்தை இழந்து வருவது வேதனையளிக்கிறது. மன நிம்மதிக்காகவும், வேண்டுதல்களுக்காகவும், நேர்த்திக்கடன்களை நிறைவேற்றவும் வருகை தரும் பக்தர்களிடத்தில் விரைவில் சுவாமி தரிசனத்திற்கு அழைத்துச் செல்கிறேன் என்று கூறி சில நபர்கள் வசூல் வேட்டை நடத்தி வருகின்றனர்.

இவர்களின் ஆசை வார்த்தைகளில் சிக்கும் பக்தர்கள் ஒரு நபருக்கு 500 முதல் 1000 வரை கொடுத்து ஏமாந்து வருகின்றனர். இவ்வாறு தொடர்ச்சியாக இதுபோன்ற புகார்கள் வந்தவண்ணம் இருப்பதை கோயில் நிர்வாகம் அறியவில்லையா அல்லது அறிந்தும் கமிஷன் போய்விடும் என்று கண்டு கொள்ளாமல் இருக்கிறதா என்று தெரியவில்லை. மேலும் சில நாட்களுக்கு முன்னர் பக்தர்கள் கேட்டை உடைத்துக் கொண்டு ஆலயத்தினுள் நுழைந்த சம்பவமும் அரங்கேறியிருக்கிறது.

இதுவரை இந்து சமய அறநிலையத்துறைக்கென்று அமைச்சரை நியமிக்காமல் காலம் தாழ்த்தி வரும் தமிழக முதல்வர் விஜய், விரைவில் துறை அமைச்சரை நியமனம் செய்து இந்து சமய அறநிலையத் துறையில் கோயில்களில் இதுபோன்று நடக்கும் சம்பவங்களை தடுத்து பக்தர்கள் மன நிம்மதியுடன் சுவாமி தரிசனம் செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்' எனத் தெரிவித்துள்ளார்

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**

## "இன்ஸ்டாகிராமை பயன்படுத்தி ஆட்சிக்கு வந்துள்ளனர்" : தவெகவை சாடிய ஸ்டாலின்

தஞ்சை: மே.19-

"சமூக வலைதளங்கள், இன்ஸ்டாகிராமை பயன்படுத்தி சிறு பிள்ளைகளை, குழந்தைகளை பிரச்சாரம் செய்ய வைத்து, அவர்களின் வீட்டில் உள்ள பெரியவர்கள், பெற்றோர்களிடம் பிரச்சாரம் செய்யவைத்து திட்டமிட்டு வாக்களிக்கச் செய்து ஆட்சிக்கு வந்துள்ளனர். அது நம் கண்ணுக்கு தெரியாமல் போய்விட்டது" என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.



தஞ்சையில் பூண்டி கலைவாணன் இல்ல திருமண நிகழ்வில் கலந்துகொண்டு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: தோல்வி, வெற்றி இரண்டையும் சமமாக கருதி பாடுபடும் இயக்கம் திமுக. நடந்து முடிந்த தேர்தலில் திமுக படுதோல்வி அடைந்துவிட்டதை போல, இத்துடன் திமுக முடிந்துவிட்டது என இரங்கற்பா பாடுவதற்கு சிலர் முன்வந்துள்ளனர். நம்முடைய இன எதிரிகள் அந்த சூழ்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். ஆனால், திமுக இதுவரை எத்தனையோ தேர்தல்களை பார்த்துள்ளது. 1949ல் தொடங்கிய திமுக, பல தேர்தல்களை சந்தித்து வெற்றியையும், தோல்வியையும் பெற்றுள்ளது.

தோல்வியடையும்போதுதான் திமுக ஃபீனிக்ஸ் பறவையாக எழுந்திருக்கிறது. இங்கே பேசியவர்கள், மேடையில் உள்ளவர்கள் மற்றும் எதிரில் உள்ளவர்கள் எல்லோரும் சோகமாக இருப்பதுபோல் உள்ளனர். நாம் சோகமாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. நாம் தான் இன்றைக்கும் ஆட்சியில் இருக்கிறோம். 5 ஆண்டுகள் ஆட்சியில் இருந்தபோது எல்லா தரப்பு மக்களுக்கும் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியது திமுக அரசு.

நாம் வெற்றி வாய்ப்பை இழந்து, புதிய ஆட்சி அமைந்தபோது, அவர்களுக்கு வாழ்த்து சொன்னேன். அப்போது, 'திமுக நிறைவேற்றிய திட்டங்களை தொடர வேண்டும்' எனச் சொன்னேன். அதன்படி நாம் வைத்த கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருப்பதை கண்கூடாகப் பார்க்கிறோம். அதனால்தான் இப்போதும் நாம் தான் ஆட்சியில் இருக்கிறோம் என்று சொன்னேன். நாம் செய்த சாதனைகளை எல்லாம் யாராலும் மாற்றிட முடியாது. நாம் கொண்டுவந்த இந்த திட்டங்கள் நடக்கும் வரை திராவிட மாடல் தான் தமிழகத்தில் ஆட்சியில் இருக்கும்.

இந்த தேர்தலில் தோல்வியடைந்ததும் நான் சோர்வடையவில்லை. நாம் எப்படி வெற்றி வாய்ப்பை இழந்தோம் என்பதை ஆராய ஒரு குழுவை அமைத்துள்ளோம். அந்த ஆய்வின் போது, நம்மிடம் என்ன பிரச்சினை, என்ன குறை எனக் கேட்டறியப்படும். இதற்காக ஒரு இணையதளமும் தொடங்கியுள்ளோம். அதில் அனைத்து தரப்பினரும் தங்கள் கருத்துகளை தெரிவிக்கலாம்.

தேர்தலுக்கு முன்பாக மக்களை சந்தித்து பல்வேறு பணிகளை திமுக செய்தது. ஆனாலும் ஏன் ஆட்சிக்கு வர முடியவில்லை?. ஆனால், தேர்தலுக்கு எந்தப் பணிகளையும் செய்யாமல், மக்களை கூட சந்திக்காமல், பாக முகவர்கள், பூத் ஏஜெண்டுகள், வாக்கு எண்ணும் ஏஜெண்டுகள் கூட நியமிக்காமல் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்துள்ளார்கள். அது தவறு இல்லை.

அவர்களின் வெற்றிக்கு காரணம் சமூக வலைதளம். இன்ஸ்டாகிராமை பயன்படுத்தி சிறுபிள்ளைகளை, குழந்தைகளை பிரச்சாரம் செய்ய வைத்து, அவர்களின் வீட்டில் உள்ள பெரியவர்கள், பெற்றோர்களிடம் பிரச்சாரம் செய்யவைத்து திட்டமிட்டு வாக்களிக்க வைத்து ஆட்சிக்கு வந்துள்ளனர். அது நம் கண்ணுக்கு தெரியாமல் போய்விட்டது. இனி நாம் உஷாராக இருந்து அதையும் முறியடிக்க திட்டங்களை தீட்டியுள்ளோம். எனவே நீங்கள் எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. மீண்டும் நாம் தான் ஆட்சிக்கு வருவோம் என்று பணியாற்றுங்கள்.

நாம் இன்னும் 5 ஆண்டுகள் ஆட்சியில் இருந்திருந்தால், பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியிருக்கலாம் என்பதே எங்கள் கவலையாக உள்ளது. ஆனாலும், எதிர்க்கட்சியாக சிறப்பாக செயல்படுவோம்." என்று கூறினார்.

## கட்சித் தாவல் தடை சட்டத்தின்படி தகுதி நீக்கம்: சட்டவிதிகளை குறிப்பிட்டு பழனிசாமி தரப்பு எச்சரிக்கை

சென்னை: மே.19-

"கட்சித் தாவல் தடைச் சட்ட புகார் விசாரணை நிலுவையில் உள்ள நிலையில், அதை எதிர்கொள்ளும் நபர் அமைச்சராக இருந்தால் ஆர்டிக்கல் 142 வழங்கும் சிறப்பு அதிகாரம் மூலம் உச்ச நீதிமன்றம் அவரை பதவி நீக்கம் செய்யலாம்" என அதிமுக வழக்கறிஞர் பிரிவு செயலாளர் இன்பதுரை தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "கட்சித் தாவல் தடைச் சட்ட புகாருக்கு ஆளாகிய ஒருவரை தகுதி நீக்கம் செய்ய அரசியலமைப்பு சட்டத்தின் 10 வது அட்டவணை சபாநாயகருக்கு அதிகாரம் தருகிறது. அவ்வாறு புகாருக்கு உள்ளானவரை அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து வைக்கும் முன் ஆர்ட்டிகல் 163 ன் படி முதல்வரிடம் விளக்கம் கேட்டு ஆளுநர் திருப்தி அடைவது அவசியம்.

விசாரணை நிலுவையில் உள்ள நிலையில் அதை எதிர்கொள்ளும் நபர் அமைச்சராக இருந்தால் ஆர்டிக்கல் 142 வழங்கும் சிறப்பு அதிகாரம் மூலம் உச்ச நீதிமன்றம் அவரை பதவி நீக்கம் செய்யலாம். மணிப்பூர் மாநில அமைச்சர் தவுனோஜம் ஷியாம்குமார் சிங் வழக்கில் 2020ம் ஆண்டு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு இதற்கு நல்ல உதாரணம். ஆக எல்லா நிலைகளிலும் அரசியலமைப்பு சட்டமே மேலோங்கி நிற்கும். இதுதான் நமது அரசியலமைப்பு சட்டத்தின் சிறப்பாகும்" எனத் தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தல் தோல்விக்குப் பின் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமிக்கு எதிராக சி.வி.சண்முகம் தரப்பினர் பகிரங்கமாகவே போர்க்கொடி தூக்கியதுடன், 25 எம்எல்ஏக்கள் சட்டப்பேரவையில் தவெக அரசுக்கு ஆதரவாகவும் வாக்களித்தனர். இதனால், அதிர்ச்சியடைந்த பழனிசாமி, தவெக அரசுக்கு ஆதரவாக வாக்களித்த எம்எல்ஏக்களின் கட்சிப் பதவிகளைப் பறித்து அதிரடி நடவடிக்கை எடுத்தார்.

அதேநேரத்தில், பழனிசாமி தங்களை மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட பொறுப்புகளில் இருந்து நீக்கியது செல்லாது என சண்முகம் தரப்பு அதிரடியாக அறிவித்துள்ளது. மேலும், சட்டப்பேரவையில் தங்களின் நிலைப்பாடு குறித்து இருதரப்பும் சபாநாயகரை தனித்தனியாகச் சந்தித்து மனு அளித்துள்ளனர். சபாநாயகர் அதிமுக விவகாரம் குறித்து விரைவில் முடிவை அறிவிப்பதாக கூறியுள்ளார். சி.வி.சண்முகம் தரப்பினர் ஒருவேளை அமைச்சராக பதவியேற்றால் தகுதி நீக்கம் செய்யப்படலாம் என்று எச்சரிக்கும் பொருட்டு அதிமுக வழக்கறிஞர் பிரிவு செயலாளர் இன்பதுரை எம்.பி இந்த பதிவினை வெளியிட்டுள்ளார்.

# உதகை அரசு தாவரவியல் பூங்காவில் 128 வது மலர்காட்சி

நீலகிரி மே,19-

நீலகிரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் கோடை விழாவை முன்னிட்டு மலர்க்காட்சி, பழக்காட்சி, ரோஜாகாட்சி மற்றும் வாசனைத் திரவியப் பயிர்கள்காட்சி உள்ளிட்ட பல்வேறு தோட்டக்கலை காட்சிகள் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக, 128வது உதகை மலர்க்காட்சி 18.05.2026 முதல் 28.05.2026 வரை கோலாகலமாக நடைபெற உள்ளது. இவ்வாண்டு மலர்க்காட்சியின் கருப்பொருளாக "தமிழ்நாட்டின் பாரம்பரியமும் பண்பாடும் பாதுகாப்போம்" தேர்வு செய்யப்பட்டு, அதனை மையமாகக் கொண்டு தமிழகத்தின் பாரம்பரிய கலைகள், கலாச்சார சின்னங்கள், வரலாற்று பெருமைகள் மற்றும் பழங்குடியினர் வாழ்வியல் பண்பாட்டினை பிரதிபலிக்கும் வகையில் பல்வேறு சிறப்பு மலர் அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது.



இம்மலர்க்காட்சியானது 18.05.2026 நேற்று காலை 10.30 மணிக்கு தொடங்கப்பட்டது. இம்மலர்க்காட்சியில் சுமார் 10 இலட்சம் மலர் நாற்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளதுடன், 50,000க்கும் மேற்பட்ட மலர்த் தொட்டிச் செடிகள் காட்சிக்காக அலங்கரித்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், 1,14,000 கார்னேசன் மலர்களைக் கொண்டு பிரம்மாண்டமான "புரட்சித்தலைவர் டாக்டர். எம்.ஜி. இராமச்சந்திரன் மத்திய இரயில் நிலையம், சென்னை" உருவாக்கப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து கார்னேஷன், சாமந்தி, ரோஜா உள்ளிட்ட சுமார் 7 இலட்சம் மலர்களைக் கொண்டு நுழைவுவாயில், 128வது மலர்க்காட்சி மலர் அலங்காரம், தமிழ்நாடு வரைபடம், திருவள்ளுவர் சிலை, பரதநாட்டிய நடன கலைஞர், தனித்துவமிக்க தஞ்சாவூர் தலையாட்டிபொம்மை, திருவாரூர் தேர். பாரம்பரிய சிறப்பு மிக்க மகாபலிபுரம் கோவில், வடிவமைப்புகள். JBL GOTLDITOOT மலர் ஒயிலாட்டம். ஐந்திணைகளான குறிஞ்சி, முல்லை. மருதம், நெய்தல், பாலை தமிழர்களின் பாரம்பரிய பொய்க்கால் குதிரையாட்டம், தப்பாட்டம், கரகாட்டம் போன்ற அமைப்புகள். தவில் மற்றும் நாதஸ்வரம் மலர் வடிவமைப்புகள், செஞ்சிச்கோட்டை மற்றும் படைவீரர்கள், விவசாயி மற்றும் மாட்டு வண்டி, படகோட்டி, காளை, தோடர் குடில், கலங்கரை விளக்கம் போன்ற அமைப்புகள் மற்றும் பிரம்மாண்டமான அரச நுழைவாயில், தொடர்வண்டி மற்றும் வேடன் போன்ற கலைநயமிக்க கண்கவர் மலர் சிற்பங்கள் மற்றும் கலைநயமிக்க அலங்கார வடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இம்மலர்க்கண்காட்சியை சுற்றுலா பயணிகள், பொதுமக்கள், விவசாய பெருமக்கள், பள்ளி மாணவர்கள் மற்றும் மலர் ஆர்வலர்கள் அனைவரும் கண்டு ரசிக்குமாறு தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் அன்புடன் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.



■ உதகை அரசு தாவரவியல் பூங்காவில் 128 வது மலர்காட்சியில் உதகை சட்டமன்ற உறுப்பினர் போஜராஜன் கலந்து கொண்டு மலர்காட்சியினை பார்வையிட்டார்.



■ உதகை அரசு தாவரவியல் பூங்காவில் 128 வது மலர்காட்சியில் ஏராளமான வெளி மாநில. வெளி மாநில சுற்றுலா பயணிகள் மற்றும் உள்ளூர் பொது மக்கள் கலந்து கொண்டு மலர்காட்சியினை கண்டு ரசித்தனர்.



# பெருங்களத்தூரில் 103வது கிளை மற்றும் ஏடிஎம் சேவையை தொடங்கிய பஞ்சாப் நேஷனல் வங்கி

பெருங்களத்தூர் மே.19-

செங்கல்பட்டு மாவட்டம் பெருங்களத்தூரில் இந்தியாவின் இரண்டாவது பெரிய பொதுத்துறை வங்கியான பஞ்சாப் நேஷனல் வங்கி தனது 103 வது கிளை மற்றும் ஏடிஎம் சேவையை சென்னை தாம்பரம் அடுத்த பெருங்களத்தூரில் சிறப்பாக தொடங்கியது.இந்த கிளை மற்றும் ஏடிஎம் சேவையை பஞ்சாப் நேஷனல் வங்கியின் சென்னை மண்டல மேலாளர் பவன் சிங் அவர்கள் திறந்து வைத்தார்.இந்த நிகழ்வில் சென்னை சர்க்கிள் ஹெட் லால்மோகன் சதபதி, துணை சர்க்கிள் ஹெட்கள் சையத் அன்வர் தீன், தீரேந்திர குமார் சாஷி, மற்றும் கிளை மேலாளர் ஜனா அவிநாஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். பின்னர் நிகழ்ச்சியில் பேசுகையில் பெருங்களத்தூர் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள், வணிகர்கள், சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோர் ஆகியோருக்கு நவீன மற்றும் விரைவான வங்கி சேவைகளை வழங்கும் வகையில் இந்த கிளை அமைக்கப்பட்டுள்ளது எனவும் புதிய ஏடிஎம் வசதி மூலம் வாடிக்கையாளர்கள் 24 மணி நேரமும் பணம் எடுக்கும் மற்றும் பிற அடிப்படை வங்கி சேவைகளை எளிதாக பயன்படுத்திக் கொள்ளலாம். சென்னையில் தனது சேவை வலையை மேலும் விரிவுபடுத்தி, வாடிக்கையாளர்களுக்கு தரமான மற்றும் நம்பகமான வங்கி சேவைகளை வழங்கும் நோக்கில் பஞ்சாப் நேஷனல் வங்கி தொடர்ந்து செயல்பட்டு வருகிறது என தெரிவித்தனர். இதில் பஞ்சாப் நேஷனல் வங்கி அலுவலர்கள், தொழிலதிபர்கள், வாடிக்கையாளர்கள் உட்பட ஏராளமனோர் கலந்து கொண்டனர்.




# பர்கூர் அரசு பொறியியல் கல்லூரியில் மாணவ, மாணவிகளுக்கான பட்டமளிப்பு விழா

கிருஷ்ணகிரி, மே 19-

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அரசு பொறியியல் கல்லூரியில் மாணவ, மாணவிகளுக்கு பட்டமளிப்பு விழா நடந்தது. கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அரசு பொறியியல் கல்லூரியில் 2024 மற்றும் 2025ம் ஆண்டு பட்டம் முடித்த மாணவ, மாணவிகளுக்கான பட்டமளிப்பு விழா நேற்று கல்லூரியில் நடந்தது. இந்த விழாவிற்கு கல்லூரி முதல்வர் திருநாவுக்கரசு தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக பெங்களூரு ஐ.ஐ.ஜி.எம். நிறுவன எலக்ட்ரிக்கல் பிரிவின் துணைத் தலைவர் டாக்டர். கங்காதரராவ் கலந்து கொண்டு 400 மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி வாழ்த்தினார்.மேலும் பட்டங்களை முறையாக பயன்படுத்தி நமது நாட்டிற்காக ஒவ்வொருவரும் சாதனை படைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு, குடும்பத்திற்கும், நமது ஊருக்கும், நமது நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்று மாணவ, மாணவிகளுக்கு அறிவுரை வழங்கினார். இதில் அனைத்து துறை தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

# தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் குறும்படப் போட்டி - கலெக்டர் தகவல்

கிருஷ்ணகிரி, மே 19-

தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் குறும்படப் போட்டி நடைபெறுகிறது.



இது குறித்து கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: இந்திய தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின், மனித உரிமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் 12வது ஆண்டாக குறும்படப் போட்டியை அறிவித்துள்ளது. இப்போட்டியில் இந்தியாவின் அனைத்து குடிமக்களும் வயது வரம்பின்றி கலந்துகொள்ளலாம். இந்த போட்டியில் வெற்றி பெறும் குறும்படங்களுக்கு முதல் பரிசாக ரூ.2 லட்சம், இரண்டாம் பரிசாக ரூ.1.50 லட்சம், மூன்றாம் பரிசாக ரு.1 லட்சம், மேலும் சிறப்பு தகுதி பெறம் 4 படங்களுக்கு தலா ரூ.50 ஆயிரம் வழங்கப்படும். இந்தி அல்லது ஏதேனும் ஒரு இந்திய மொழில் (ஆங்கில துணைத் தலைப்புடன்) அல்லது ஆங்கிலத்தில் இருக்கலாம். குறைந்தபட்சம் 3 நிமிடங்கள் முதல் அதிகபட்சமாக 10 நிமிடங்கள் வரை இருக்கலாம். கூகுள் டிரைவ் வழியாக ஸீலீகூஷீநீஉலீஷீகூஷீமீயீவீறீனீ@ ரீனீணீவீறீ.நீஷீனீ என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும். இதற்கு வருகிற ஜூன் மாதம் 30ம் தேதி கடைசி நாளாகும்.

மேலும், கூடுதல் விவரங்கள மற்றும் விண்ணப்பப் படிவங்களை ஆணையத்தின் அதிகாரப்பூர்வ இணையதளமான https://nhrc.nic.in என்பவதில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கல்வி நிறுவனங்கள், கிராம ஊராட்சிகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இதில் பெருமளவில் கலந்துகொண்டு, மனித உரிமை கலாச்சாரத்தை வளர்க்க ஒத்துழைக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு தனது செய்திக்குறிப்பில் கலெக்டர் தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

## நிலப் பிரச்சனையால் விரக்தி

# கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளி தீக்குளிக்க முயற்சி

## மருத்துவமனையில் அனுமதி – வெங்கடேசனை சந்தித்து ஆறுதல் கூறிய எம்.எல்.ஏ முகுந்த் பாண்டியன்

கிருஷ்ணகிரி, மே 19-

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர் கூட்டத்தில் பரபரப்பான சம்பவம் ஒன்று நடைபெற்றது. நிலப் பிரச்சனையில் நீதி கிடைக்காததால் விரக்தியடைந்த மாற்றுத்திறனாளி வெங்கடேசன் என்பவர் தன்னுடைய உடலில் பெட்ரோல் ஊற்றி தீக்குளிக்க முயன்றார்.

அப்போது அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் மற்றும் தீயணைப்பு வீரர்கள் உடனடியாக செயல்பட்டு அவரை மீட்டனர். தீக்காயமடைந்த வெங்கடேசன் உடனடியாக கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.



வெங்கடேசன், தனது நிலத்தை போலி ஆவணங்கள் மூலம் அபகரிக்க முயற்சி நடைபெறுவதாகக் கூறி ஏற்கனவே மாவட்ட நிர்வாகத்திடம் பலமுறை மனு அளித்திருந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த சம்பவம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட தகவலில், வெங்கடேசன் அளித்த கோரிக்கையின் அடிப்படையில் கடந்த 27.12.2025 அன்று சம்பந்தப்பட்ட நிலம் அளவீடு செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் முகுந்த் பாண்டியன், அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் வெங்கடேசனை நேரில் சந்தித்து அவரது உறவினர்களிடம் ஆறுதல் தெரிவித்தார். மேலும், வெங்கடேசனுக்கு தேவையான மேல் சிகிச்சைகள் தாமதமின்றி முழுமையாக வழங்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

# கேரளத்திலும் பெண்களுக்கு அரசு பேருந்துகளில் இலவசம்: கேரள முதல்வர்

திருவனந்தபுரம்::மே 19-

ஜூன் 15ம் தேதி முதல் கேரள அரசு பேருந்துகளில் பெண்களுக்கு இலவச பயணம் என கேரள முதல்வர் வி.டி.சதீசன் அறிவித்துள்ளார். கேரள,




நாட்டில் முதன்முறையாக முதியோர் நலனுக்காக தனித்துறை உருவாக்கியுள்ளது. தேர்தலின் போது அளித்த முக்கியமான ஐந்து வாக்குறுதிகளில், இரண்டு வாக்குறுதிகளை கேரள முதல்வர் வி.டி.சதீசன் நிறைவேற்றியுள்ளார்

# ஸ்சென்னை அம்பத்தூரில் 500 போதை மாத்திரைகள் பறிமுதல்

சென்னை:மே 19-

அம்பத்தூரில் 500 போதை மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டது. இதில் கேசவன் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். மாணவர்களுக்கு போதை மாத்திரைகள் விற்பனை செய்யப்படுவதாக வந்த தகவலையடுத்து போலீசார் நடவடிக்கை எடுத்தனர். 500 போதை மாத்திரைகள் மற்றும் 2 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்து அம்பத்தூர் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்

# கந்திகுப்பம் அருகேவேல்மாறல் மற்றும் திருப்புகழ் வழிபாடு நிகழ்ச்சி 3 ஆயிரத்திற்கும் அதிகமானோர் பங்கேற்பு

கிருஷ்ணகிரி, மே 19-

கிருஷ்ணகிரி மாவட்டம் கந்திகுப்பம் அருகே வேல்மாறல் மற்றும் திருப்புகழ் வழிபாடு நிகழ்ச்சி நடந்தது. கிருஷ்ணகிரி மாவட்டம் கந்திகுப்பம் அருகே உள்ள தனியார் திருமண மண்டபத்தில், வாழ்வை மாற்றும் வேல்மாறல் மற்றும் திருப்புகழ் வழிபாடு நேற்று நடந்தது. இதையொட்டி, நேற்று முன்தினம் மாலை 4.30 மணிக்கு சாயரக்ஷையும், இரவு 7.30 மணிக்கு, அர்த்த ஜாம பூஜையும், நேற்று அதிகாலை 4.30 மணிக்கு, சத்ரு சம்ஹார திரிசதி ஆகியவை நடந்தது. நேற்று காலை 8.30 மணிக்கு வாழ்வை



மாற்றும் வேல்மாறல் மற்றும் திருப்புகழ் வழிபாடு நடந்தது. இதில், வேல்மாறல் சேவா அறக்கட்டளை மூலம், வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகளால் அருளப்பட்ட வேல்மாறல் மற்றும் திருப்புகழ் வழிபாடுகளை மக்களிடம் கொண்டு சேர்க்கும் நிகழ்வாக இந்த நிகழ்ச்சி நடந்தது. அறக்கட்டளை தலைவர் விஜயகுமார் தலைமையில், சொற்பொழிவாற்றி, வேலுக்கு சிறப்பு பூஜைகள் செய்து வேல்மாறல் திருப்புகழ் வழிபாடு மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து, வேலுக்கு விஸ்வரூப பூஜைகள் நடத்தி, இளநீர், தேன், கரும்புசாறு, சந்தனம், திருநீறு உள்ளிட்ட பொருட்களால் அபிஷகம் செய்யப்பட்டு, தாமரை, ரோஜா, துளசி, அருகம் புல், செவ்வந்தி உள்ளிட்ட பல்வேறு மலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டது. முருகன் படத்திற்கு முன் விளக்கேற்றி வேல்மாறல் பாராயணம் செய்யப்பட்டது. மன பயம் மற்றும் எதிரிகள் தொல்லை நீங்க இந்த பூஜை மேற்கொள்ளப்பட்டது. இதில், முருகன் குதிரை பூட்டிய தேரில் செல்வது போன்ற அமைப்பில் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. நிகழ்ச்சியில், கிருஷ்ணகிரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து சுமார் 3,000க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் வேல்மாறல் புத்தகங்கள் முருகன் பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டன.



# ஆற்காடு தொகுதிக்கு 2 மாதங்களில் இடை தேர்தல் வரும் மாவட்ட செயலாளர் ஏழுமலை பேச்சு!

ராணிப்பேட்டை மே,19-

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அண்ணா சிலைக்கு புதியதாக அஇஅதிமுக மேற்கு மாவட்ட செயலாளர் ஆக பொறுப்பேற்ற சுமைதாங்கி ஏழுமலை மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அப்போது அவர் பேசுகையில் துரோகி ஆற்காடு சட்டமன்ற உறுப்பினரால் ஆற்காடு தொகுதிக்கு இன்னும் இரண்டு மாதங்களில் இடைத்தேர்தல் வரும் என்று தெரிவித்தார். நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தமிழக வெற்றிக்கழகம் அதிக பெரும்பான்மையை நிரூபித்து ஆட்சி அமைத்ததை தொடர்ந்து அவருக்கு ஆதரவு அளிப்பதாக ஆற்காடு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ் எம் சுகுமார் தெரிவித்ததை தொடர்ந்து அஇஅதிமுக மேற்கு மாவட்ட செயலாளர் பொறுப்பை அக்கட்சி பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி திரும்பப் பெற்றார். மேற்கு மாவட்ட செயலாளராக சுமைதாங்கி ஏழுமலை அவர்களுக்கு பொறுப்பு வழங்கப்பட்டது. மறைந்த அண்ணா திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் நகரச் செயலாளர் ஜிம். சங்கர் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



■ செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரத்தில் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பாக நடந்த வெற்றி விழா நிகழ்ச்சியில் பொழிச்சலூர் மேற்கு ஊராட்சி சார்பாக கலந்துகொண்டு பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் ஜே.காமாட்சி ஜெயகிருஷ்ணன் அவர்களுக்கு பொழிச்சலூர் மேற்கு ஊராட்சி கிளை சார்பாக பொழிச்சலூர் மேற்கு கிளை இணைச் செயலாளர் எஸ்.ஜான்அவர்கள் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு கேடயம் வழங்கி அவர்களிடம் வாழ்த்து தெரிவித்தனர் இந்த நிகழ்ச்சியில் பொழிச்சலூர் ஊராட்சி கழகச் செயலாளர் ஜே.மணி, ஜெய மோகன்,பொழிச்சலூர் மேற்கு கிளை செயலாளர் சுரடி ரவி, பொருளாளர் ஹர்ஷா மற்றும் கழகத் நிர்வாகிகள் மகளிர் அணி மற்றும் வார்டு நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# வெளியேறும் அந்நிய முதலீடுகள் - வரலாற்றுச் சரிவில் டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு

புதுடெல்லி:மே 19-

இன்றைய வர்த்தகத்தின் தொடக்கத்தில் அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு 96.20 என்ற வரலாற்றுச் சரிவைச் சந்தித்துள்ளது. வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்களின் தொடர் வெளியேற்றமே இதற்குக் காரணம் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். சர்வதேச அளவிலான பிரச்சினைகள் மற்றும் உள்நாட்டுச் சவால்கள் காரணமாக டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு நிலையற்றதாக மாறி வருகிறது. கடந்த ஐந்து வர்த்தக அமர்வுகளில் ரூபாய் மதிப்பு தொடர்ந்து சரிவைச் சந்தித்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை ரூபாயின் மதிப்பு 95.84 முதல் 96.14 வரை ஊசலாடிய நிலையில் வர்த்தக முடிவில் 95.97 என்பதாக நிலைபெற்றது. இதுவும் ஒரு வரலாற்றுச்சரிவாகவே அமைந்தது.இந்நிலையில் இன்று வர்த்தகத்தின்



தொடக்கத்தில் ரூபாயின் மதிப்பு 96.20 என்ற மற்றுமொரு வரலாற்றுச் சரிவைக் கண்டது. ரூபாயின் மதிப்பு இன்று 95.85 முதல் 96.30 வரை ஏற்ற இறக்கங்களைச் சந்திக்கும் என ஆய்வாளர்கள் கணிக்கின்றனர்.ரூபாய் மதிப்பின் சரிவு 96.30 முதல் 96.40க்குள் இருக்கும்படி தாக்குப்பிடிப்பதற்கான உடனடி தடை நிலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த வரம்புக்கு மேல் ரூபாயின் மதிப்பு சரிந்தால் அது 96.50 என்ற நிலையை நோக்கி தள்ளக்கூடும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர். சரிவுக்குக் காரணம் என்ன?வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்களின் தொடர் வெளியேற்றமே ரூபாய் சரிவுக்கு முக்கியக் காரணமாகத் திகழ்கிறது. தற்போதைய மே மாதத்தில் இதுவரை இந்திய பங்குச் சந்தையில் இருந்து சுமார் ரூ.27,000 கோடி வெளிநாட்டு நிறுவன முதலீடுகள் வெளியேறி உள்ளன. இந்த ஆண்டில் இதுவரை ரூ.2.2 லட்சம் கோடி வெளியேறி உள்ளது. கடந்த ஆண்டு முழுவதும் வெளியேறிய வெளிநாட்டு நிறுவன முதலீடு ரூ.1.66 லட்சம் கோடியாக இருந்த நிலையில், இந்த ஆண்டில் இதற்குள்ளாகவே அதை மிஞ்சிவிட்டது.கச்சா எண்ணெய் விலையின் அதிரடி உயர்வு ரூபாய் சரிவுக்கு முக்கிய காரணியாக உள்ளது. பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை ஒரு பேரல் 111 டாலரை தாண்டிவிட்டது. இதனால், இந்தியாவின் இறக்குமதிச் செலவு அதிகரித்து, பணவீக்கம் குறித்த அச்சங்களைத் தூண்டுகிறது

# 38வது தமிழ்நாடு ஸ்டேட் அண்டர் 9 ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தமிழ்நாடு செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு கோப்பை மற்றும் பரிசு தொகை வழங்கி கௌரவிப்பு




மண்ணிவாக்கம் மே.19-

செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூர் அடுத்த மண்ணிவாக்கத்தில் மே 13 2026 அன்று முதல் 17 வரை 38வது தமிழ்நாடு ஸ்டேட் அண்டர் 9 ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தமிழ்நாடு செஸ் சாம்பியன்ஷிப் போட்டிகள் மண்ணிவாக்கத்தில் உள்ள பெரி பொரியல் கல்லூரியில் மே 13 அன்று முதல் நாள் சதுரங்கப் போட்டிகளை அகில உலக சதுரங்க கழகம் FIDE வின் முன்னாள் துணைத் தலைவர் டி.வி.சுந்தர் மற்றும் தமிழ்நாடு சதுரங்க கழகத்தின் செயலாளர் ஸ்டீபன் பாலசாமி, பெரி பொரியல் கல்லூரியின் தலைமை செயல் அலுவலர் சாய் வீரராஜன் ஆகியோர் கலந்து கொண்டு இந்த போட்டிகளை துவக்கி வைத்தனர்.இரண்டாம் நாள் போட்டிகளை தாம்பரம் மாநகராட்சி மூன்றாவது மண்டல குழு தலைவர் ஜெய பிரதீப் சந்திரன், கௌரிவாக்கம் பிரின்ஸ் வெங்கடேஸ்வரா கல்லூரியின் வைஸ் சேர்மன் பிரசன்னா வெங்கடேஷ் ஆகியோர் துவக்கி வைத்தனர். ஆண்கள் பெண்கள் என தனித்தனியாக ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனியாக 9 சுற்றுக்கள் நடைபெற்ற இந்தப் போட்டியில் தமிழ்நாடு முழுவதும் இருந்து 9 வயதுக்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கான சேம்பியன்ஷிப் போட்டிகளில் சுமார் 400க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் ஐந்து நாட்கள் நடைபெற்ற இப் போட்டிகள் 17.05. 2026 அன்று நிறைவடைந்தன. மாலை 3 மணி அளவில் பரிசளிப்பு விழா நடைபெற்றது இதில் சிறப்பு விருந்தினர்களாக கல்லூரியின் தாளாளர் சரவணன் பெரியசாமி, கல்லூரியின் சிஇஓ ரோஜா மற்றும் தமிழ்நாடு சதுரங்க விளையாட்டு கழகத்தின் பொருளாளர் சீனிவாசன் சென்னை குரோம்பேட்டை எம்.ஐ.டி அண்ணா யுனிவர்சிட்டி ஆட்டோ மொபைல் துறை தலைவர் டாக்டர் கே.அண்ணாமலை மற்றும் செங்கல்பட்டு மாவட்ட சதுரங்க கழக தலைவர் ஜானகிராமன், செயலாளர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டு முதல் 10 இடங்களைப் பிடித்த ஆண்கள் பெண்கள் ஆகியோருக்கு பரிசு கோப்பைகளையும் பண பரிசுகளையும் வழங்கி கௌரவித்தனர். இதில் ஆண்கள் பிரிவில் சித்தார்த் அனுஜ் சென்னை மாவட்டம், தாரகன் புதுக்கோட்டை மாவட்டம், இன்ப தினேஷ் பாபு கோயம்புத்தூர் மாவட்டம்,ஆகியோர் முதல் மூன்று இடங்களை பிடித்தனர் பெண்கள் பிரிவில் ஆரண்யா மதுரை மாவட்டம், டிரிஷா சென்னை மாவட்டம், ஆஷ்ரிதா கிருஷ்ணகிரி மாவட்டம் ஆகியோர் பெண்கள் பிரிவில் முதல் மூன்று இடங்களை பிடித்து தமிழ்நாடு அளவில் செஸ் சாம்பியன்ஷிப் போட்டிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டனர் .இதில் கலந்து கொண்ட செஸ் விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகள் மற்றும் அவர்களது பெற்றோர்களுக்கும் உணவு , தங்கும் வசதி மற்றும் பேருந்து வசதி ஆகியவை செங்கல்பட்டு சதுரங்க கழகம் மற்றும் பெரி பொரியல் கல்லூரி சார்பாக சிறப்பாக ஏற்பாடு செய்து தரப்பட்டது.இதில் மாணவர்கள் பெற்றோர்கள் என ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இங்கே தங்கி விளையாடினர்.

இதில் தமிழ்நாடு சதுரங்க கழக நிர்வாகிகள் செங்கல்பட்டு மாவட்ட சதுரங்க கழக நிர்வாகிகள் கல்லூரியில் பேராசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் விளையாட்டு வீராங்கனைகள் என ஏராளமானவர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்து தந்தனர்.

# சர்வதேச விமான நிலையத்தை 30 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடும் இலங்கை




கொழும்பு:மே,19-

ஹம்பாந்தோட்டா துறைமுகம் அருகே அமைந்துள்ள மத்தல ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தை (விஸிமிகி) நீண்டகால குத்தகை மற்றும் நிர்வாகத்திற்காக உலகளாவிய முதலீட்டாளர்களுக்கு வழங்க இலங்கை அரசு முன்வந்துள்ளது.

மத்தல ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தை 30 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு எடுத்து நடத்த உள்நாட்டு மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களுக்கு இலங்கை அரசு அழைப்பு விடுத்து உள்ளது. கடந்த 2013ஆம் ஆண்டு சீன வங்கியிடமிருந்து சுமார் 209 மில்லியன் அமெரிக்க டாலர் கடனாக பெற்று துவக்கப்பட்ட இந்த விஸிமிகி விமான நிலையம், பல ஆண்டுகளாகவே பயன்பாடற்ற நிலையில் இருந்து வருகிறது.

2013ஆம் ஆண்டில் சீன நிதியுதவியுடன் கட்டப்பட்ட மற்றும் சீனக் கட்டுப்பாட்டில் உள்ள ஹம்பாந்தோட்டா துறைமுகத்திற்கு அருகில் அமைந்திருப்பதுமான இந்த விமான நிலையம், இந்தியாவால் மிக உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. MRIA திறக்கப்பட்டதிலிருந்து வணிகப் போக்குவரத்தை ஈர்ப்பதில் சிரமப்பட்டு வருகிறது. அதன் செயல்பாடுகள், தளவாடங்கள் மற்றும் தொழில்துறை உள்கட்டமைப்பை மேம்படுத்தவே 30 ஆண்டு கால குத்தகை மூலம் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு இலங்கை அரசு அழைப்பு விதித்துள்ளது. முழுமையாகப் பயன்படுத்தப்படாத இந்த சர்வதேச விமான நிலையத்தை ஒரு துடிப்பான விமானப் போக்குவரத்து மையமாக மாற்றுவதற்கும், இதன் மூலம் லாபத்தை ஈட்டவும் இலங்கை இந்த முடிவை எடுத்துள்ளதாக கூறப்படுகிறது.மேலும் உள்நாட்டு மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களிடமிருந்து ஜூன் 9ஆம் தேதிக்குள் விருப்ப வெளிப்பாடுகளை (Expressions of Interest - EOI) இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது. இலங்கை தலைநகர் கொழும்பிலிருந்து சுமார் 250 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள இந்த சர்வதேச விமான நிலையம், ஒரு பிரம்மாண்டமான முனையக் கட்டிடம் மற்றும் 3,500 மீட்டர் நீளமுள்ள ஓடுபாதை ஆகியவற்றைக் கொண்டிருந்த போதிலும், வணிக ரீதியாக லாபகரமான நிலையை அடையத் தேவையான பயணிகள் போக்குவரத்தையும் விமான நிறுவனங்களின் ஒப்பந்தங்களையும் ஈர்க்க தவறியது குறிப்பிடத்தக்கது




# நீட் வினாத்தாள் கசிவு: மறுதேர்வு மட்டும்தான் தீர்வா?

சென்னை, மே 19-

அண்மையில் நடந்த நீட் மருத்துவ (இளநிலை) நுழைவுத் தேர்வில் முறைகேடு நடந்ததாகக் கண்டறியப்பட்டதை அடுத்து, தேர்வு ரத்து செய்யப்படுவதாகவும் ஜூன் 21 அன்று மறுதேர்வு நடத்தப்படும் என்றும் தேசியத் தேர்வு முகமை (என்டிஏ) அறிவித்துள்ளது. நீட் தொடர்பான சர்ச்சைகளுக்குத் தீர்வு காண வேண்டிய கட்டாயத்தை இவ்விவகாரம் உருவாக்கி இருக்கிறது.

நாடு முழுவதும் மே 3 அன்று நடந்த நீட் தேர்வில் ஏறக்குறைய 22.8 லட்சம் மாணவர்கள் பங்கேற்றனர். தேர்வு நடப்பதற்கு இரண்டு வாரங்கள் முன்னதாகவே, ராஜஸ்தானின் சீகர் மாவட்டத்தில் வினாத்தாள் கசிந்ததாகச் செய்திகள் வெளியாகின.

முதலில் இத்தகவலை மறுத்த என்டிஏ, தேர்வை ரத்துசெய்வதாக மே 12 அன்று தெரிவித்தது. இவ்விவகாரம் தொடர்பாக சிபிஐ விசாரணை நடத்த உத்தரவிட்டது மத்திய அரசு. இதுவரை 5 பேர் கைதாகியிருக்கின்றனர்.

ஏற்கெனவே, 2024இல் இதே போன்று வினாத்தாள் கசிவு விவகாரம் சர்ச்சையானது. அது தொடர்பாக விசாரணை மேற்கொள்ள அமைக்கப்பட்ட கே.ராதாகிருஷ்ணன் குழு 101 பரிந்துரைகளை அரசிடம் சமர்ப்பித்தது. என்டிஏ மறுசீரமைப்பு, பல கட்ட நுழைவுத்தேர்வு உள்ளிட்ட அம்சங்கள் அதில் இடம்பெற்றிருந்தன.

ராஜஸ்தானில் கண்டறியப்பட்டுள்ள வினாத்தாள் கசிவு விவகாரம், அந்தப் பரிந்துரைகள் எந்த அளவுக்குச் செயல்பாட்டுக்கு வந்துள்ளன என்னும் கேள்வியை எழுப்புகிறது. தூக்கம், ஓய்வு, கேளிக்கையைப் புறந்தள்ளிவிட்டு, பல மாணவர்கள் நீட் தேர்வை எதிர்கொள்ளப் பயிற்சியெடுத்து வருகின்றனர்.

# கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் எம்.எல்.ஏ. முகுந்த் பாண்டியன் திடீர் ஆய்வு

கிருஷ்ணகிரி, மே,19-

குடிநீர், கழிப்பறை சுகாதாரம் மற்றும் நோயாளி வசதிகள் குறித்து அதிகாரிகளுக்கு உத்தரவுகிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் முகுந்த் பாண்டியன் திடீர் ஆய்வு மேற்கொண்டார். மருத்துவமனையின் பல்வேறு பிரிவுகளை பார்வையிட்ட அவர், நோயாளிகளுக்கு வழங்கப்படும் அடிப்படை வசதிகள் மற்றும் சுகாதார நிலை குறித்து அதிகாரிகளிடம் நேரடியாக கேட்டறிந்தார்.அப்போது மருத்துவமனையின் ஏழாவது மாடிக்கு சென்று குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியை ஆய்வு செய்தார். நோயாளிகளுக்கு



வழங்கப்படும் குடிநீர் சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் இருக்க வேண்டும் என்பதால், 15 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் தொட்டிகளை முறையாக சுத்தம் செய்து பராமரிக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.மேலும் மருத்துவமனையில் உள்ள நோயாளிகளின் கழிப்பறைகளை சுத்தமாகவும் சுகாதாரமான முறையிலும் பராமரிக்க வேண்டும் என்றும், தினசரி கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார். நோயாளிகள் மற்றும் அவர்களது உறவினர்கள் சிரமமின்றி பயன்படுத்தும் வகையில் அனைத்து அடிப்படை வசதிகளும் சீராக இருக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து மருத்துவக் கல்லூரி கூட்ட அரங்கில் அரசு தலைமை மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனை நிர்வாக அதிகாரிகளுடன் ஆலோசனை கூட்டம் நடத்தினார். கூட்டத்தில் மருத்துவமனையின் உள்கட்டமைப்பு வசதிகள், நோயாளிகளுக்கு தேவையான மருத்துவ சேவைகள், உணவு, குடிநீர் மற்றும் சிகிச்சை வசதிகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. அப்போது எம்.எல்.ஏ. முகுந்த் பாண்டியன், மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்கு எந்தவித குறையும் இல்லாத வகையில் அனைத்து வசதிகளையும் தங்கு தடையின்றி செய்து கொடுக்க வேண்டும் என்றும், பொதுமக்கள் நலனே முதன்மை என்ற அடிப்படையில் மருத்துவர்கள் மற்றும் அதிகாரிகள் செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## விதிமுறையை மீறிய காவல்துறை? மானாமதுரையில் சர்ச்சையை கிளப்பிய பிளக்ஸ் பேனர்



மானாமதுரை மே,19-

மானாமதுரை பழைய பேருந்து நிலையம் அருகிலுள்ள ரயில்வே கேட் பகுதியில் அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் காவல் அதிகாரி படம் அடங்கிய பிளக்ஸ் பேனர் பொதுமக்கள் மத்தியில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.இந்த பகுதி எப்போதும் அதிக போக்குவரத்து நெரிசல் காணப்படும் இடமாக இருப்பதால், சாலையோரங்களில் வைக்கப்படும் பிளக்ஸ் பேனர்கள் வாகன ஓட்டிகளின் கவனச்சிதறலுக்கும் விபத்து அபாயத்திற்கும் காரணமாக இருப்பதாக கூறப்படுகிறது. இதையடுத்து, "அனுமதியின்றி பிளக்ஸ் பேனர்கள் மற்றும் விளம்பர பலகைகள் வைக்கக் கூடாது; மீறினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்" என்ற எச்சரிக்கை பலகையை காவல் துறையினர் முன்பே அப்பகுதியில் நிறுவியிருந்தனர்.இந்நிலையில், அதே எச்சரிக்கை பலகைக்கு அருகிலேயே பரதநாட்டிய அரங்கேற்ற விழாவை முன்னிட்டு வாழ்த்து தெரிவிக்கும் வகையில் புதிய பிளக்ஸ் பேனர் வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதில் மானாமதுரை காவல் துணை கண்காணிப்பாளர் (DSP) மற்றும் காவலர் ஒருவரின் புகைப்படங்கள் இடம்பெற்றுள்ளன.

சட்டத்தை அமல்படுத்தும் காவல் துறையினரின் புகைப்படங்களுடன் பேனர் வைக்கப்பட்டிருப்பது குறித்து சமூக ஆர்வலர்கள் மற்றும் வாகன ஓட்டிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

"பொதுமக்களுக்கு ஒரு விதி, அதிகாரிகளுக்கு வேறு விதியா?" என்ற கேள்வியும் சமூக வலைதளங்களில் எழுந்து வருகிறது. இந்த விவகாரம் மானாமதுரை பகுதியில் தற்போது பேசுபொருளாக மாறியுள்ளது.



■ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்கள். உடன் மாநகர காவல் துணை ஆணையர் ராஜராஜன் உள்ளார்.

## "பிரதமர் மோடிக்கும் பாஜக அரசுக்கும் தொலைநோக்குப் பார்வை இல்லை" கார்கே குற்றச்சாட்டு



பெங்களூரு: மே,19-

பிரதமர் நரேந்திர மோடிக்கும் அவரது அரசுக்கும் தொலைநோக்குப் பார்வை இல்லை என்று குற்றம் சாட்டியுள்ள காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, பணவீக்க உயர்வுக்கு அவர்களே பொறுப்பு என தெரிவித்துள்ளார்.பெட்ரோல், டீசல் விலை சமீபத்தில் உயர்த்தப்பட்டது குறித்த செய்தியாளர்களின் கேள்விக்கு பெங்களூருவில் பதில் அளித்த அகில இந்திய காங்கிரஸ் தலைவரும் மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவருமான மல்லிகார்ஜுன கார்கே, "இந்த விலை உயர்வை பிரதமர் மோடி தேர்தலுக்கு முன்பே அறிவித்திருந்தால் அது புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்திருக்கும். அவ்வாறு செய்வது தனக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். எனவேதான், தேர்தல் முடிந்த பிறகு அனைத்துப் பொருட்களின் விலைகளும் உயர்த்தப்பட்டன. பாஜக அரசுக்கும் பிரதமர் மோடிக்கும் தொலைநோக்குப் பார்வை இல்லை என்பதை இது காட்டுகிறது. இந்த பிரச்சினையை நிச்சயம் நாங்கள் எழுப்புவோம். பாஜக அரசால் பணவீக்கம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. ஏழை எளிய மக்கள் அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்காமல் தவிக்கின்றனர்" என தெரிவித்துள்ளார்.

## விமானப் படைக்காக குஜராத்தில் தயாரிக்கப்பட்ட ஏர்பஸ் சி295 போக்குவரத்து விமானம் பரிசோதனைக்கு தயார்



வதோதரா:மே,19-

விமானப்படை பயன்பாட்டுக்காக குஜராத்தின் வதோதரா நகரில் உள்ள டாடா ஏர்பஸ் மையத்தில் தயாரிக்கப்பட்ட ஏர்பஸ் சி295 போக்குவரத்து விமானம் பரிசோதனைக்கு தயார் நிலையில் உள்ளது.

இந்திய விமானப் படையில் வீரர்கள் மற்றும் சரக்கு போக்குவரத்துக்கு பயன்படுத்தப்பட்ட ஆவ்ரோ 748 விமானங்களுக்கு மாற்றாக ஏர்பஸ் நிறுவனத்தின் சி295 ரக விமானத்தை சேர்க்க முடிவு செய்யப்பட்டது. இதில் 70 வீரர்கள் பயணிக்கலாம், ராணுவத் தளவாட பொருட்களையும் எடுத்துச் செல்லலாம். குறுகிய ஓடுதளத்தில் இந்த விமானம் மேலே எழும்பும். விமானப் படை பயன்பாட்டுக்கு 56 சி295 ரக விமானங்களை கொள்முதல் செய்ய ஸ்பெயின் நாட்டுடன் ரூ.21,935 கோடிக்கு இந்தியா ஒப்பந்தம் செய்தது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் 16 விமானங்கள் ஸ்பெயினில் இருந்து வாங்கப்படும். மீதம் உள்ள 40 விமானங்கள் மேக் இன் இந்தியா திட்டத்தின் கீழ் டாடா ஏர்பஸ் நிறுவனமும் இணைந்து குஜராத்தின் வதோதரா நகரில் தயாரிக்கின்றன. இந்த மையத்தை பிரதமர் மோடி, ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் ஆகியோர் கடந்த 2024ம் ஆண்டு தொடங்கி வைத்தனர்.இந்த மையத்தில் தயாரான முதல் சி295 ரக விமானம் தற்போது பரிசோதனைக்கு தயாராக உள்ளது. இந்த விமானத்தின் வடிவமைப்பில் 85 சதவீதத்துக்கும் மேல் உள்நாட்டில் நடைபெற்றது. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 13,000க்கும் மேற்பட்ட பாகங்கள் இதில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்தியாவின் 37 பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்கள் விமான தயாரிப்புக்கு தேவையான பாகங்களை விநியோகித்துள்ளன.இங்கு தயாரான முதல் விமானத்தை இந்திய விமானப் படையின் துணை தளபதி ஏர் மார்ஷல் அவதேஷ் குமார் பாரதி சமீபத்தில் பார்வையிட்டார். இந்த விமானம் முதல் பறக்கும் சோதனைக்கு தயாராகி வருகிறது.

## மதுரையிலிருந்து செல்லும் அரசு பேருந்துகள் மானாமதுரையில் நின்று செல்ல வேண்டும்: முதல்வர் மற்றும் எம்.எல்.ஏவிடம் பொதுமக்கள் கோரிக்கை



மானாமதுரை மே,19-

மதுரையிலிருந்து இராமேஸ்வரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு இயக்கப்படும் அனைத்து அரசு பேருந்துகளும் மானாமதுரை பேருந்து நிலையத்தில் நின்று செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக முதல்வர் ஜோசப் விஜய் மற்றும் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் இளங்கோவன் ஆகியோரிடம் பொதுமக்கள் சார்பில் கோரிக்கை மனு அளிக்கப்பட்டுள்ளது.

'இரயில்வே காலனி சேவைக் கரங்கள் - பிரண்ட்ஸ் கிளப்' அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் இணைந்து அனுப்பியுள்ள அந்த மனுவில், மானாமதுரையில் சுமார் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருவதாகவும், உயர் கல்வி மற்றும் மேம்பட்ட மருத்துவ வசதிகளுக்காக தினசரி மதுரைக்கு சென்று வர வேண்டிய நிலை இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக, கல்லூரி மாணவிகள் மற்றும் வேலைக்குச் செல்லும் பெண்கள் அதிக அளவில் மதுரையை நம்பியிருப்பதால், போக்குவரத்து வசதி மிக அவசியமானதாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுரையிலிருந்து இராமேஸ்வரம், இராமநாதபுரம், ஏர்வாடி, முதுகுளத்தூர், பரமக்குடி உள்ளிட்ட பகுதிகளுக்குச் செல்லும் பல அரசு பேருந்துகள் மானாமதுரை பேருந்து நிலையத்திற்குள் வராமல் புறவழிச்சாலை வழியாகச் செல்வதாக பொதுமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

மேலும், மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தில் இருந்து மானாமதுரை செல்லும் பயணிகளை சில நடத்துனர்கள் பேருந்துகளில் ஏற்ற மறுப்பதாகவும், மீறி ஏறினாலும் வழியிலேயே இறக்கிவிடப்படுவதாகவும் மனுவில் வேதனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரவு நேரங்களில் பெண்கள், மாணவிகள் மற்றும் முதியவர்கள் கடுமையான சிரமத்திற்கும் பாதுகாப்பு அச்சத்திற்கும் உள்ளாகி வருவதாகவும், மானாமதுரை நான்குவழிச்சாலை பேருந்து நிலையம் அருகே இருந்தும் பேருந்துகள் நிற்காமல் செல்வது பொதுமக்களை அவதிக்குள்ளாக்குவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்ட அரசு போக்குவரத்துக் கழக அதிகாரிகளுக்கு உரிய உத்தரவு வழங்கி, மதுரையிலிருந்து செல்லும் அனைத்து அரசு பேருந்துகளும் மானாமதுரை பேருந்து நிலையத்திற்குள் வந்து பயணிகளை ஏற்றிச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## 2 பெண்களை எரித்து கொல்ல முயன்ற ஆசாமி அதிரடி கைது: விசாரணையில் பரபரப்பு தகவல்கள்

அருப்புக்கோட்டை: மே,19-

அருப்புக்கோட்டையில் 2 பெண்களை எரித்து கொல்ல முயன்ற வழக்கில் முதியவரை போலீசார் அதிரடியாக கைது செய்து விசாரித்து வருகின்றனர். விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை அருகே, பாளையம்பட்டியில் உள்ள சர்ச் தெருவைச் சேர்ந்தவர் பாண்டியராஜ். இவரது மனைவி சாந்தி (42). தாய்மைப் பணியாளர். இவர்களது மகன் சந்தீப்குமார் (17), மகள் யாழினி (13). பாண்டியராஜ் சில ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். இதனால், சாந்தி தனது பிள்ளைகளுடன் வசித்து வந்தார். இந்த நிலையில், பாண்டியராஜின் அக்கா ஸ்ரீதேவி (45) என்பவர் தனது கணவர் இறந்தநிலையில், அவரும் சாந்தி வீட்டில் வசித்து வந்தார். நேற்று முன்தினம் இரவு சாந்தி, ஸ்ரீதேவி ஆகியோர் வீட்டு திண்ணையில் உறங்கிக் கொண்டிருந்தனர். பிள்ளைகள் வீட்டிற்குள் தூங்கினர். நேற்று அதிகாலை 3.30 மணியளவில் வந்த மர்ம நபர் ஒருவர் சாந்தி, ஸ்ரீதேவி ஆகியோர் மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீவைத்துவிட்டு தப்பிச் சென்றார். உடலில் தீப்பற்றி எரிந்ததில் இருவரும் அலறினர். சத்தம் கேட்டு ஓடி வந்த அக்கம்பக்கத்தினர் இருவரையும் மீட்டு 108 ஆம்புலன்சில் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு முதலுதவி சிகிச்சைக்கு பின் இருவரும் விருதுநகர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 70 சதவீத காயத்துடன் சாந்தி சீரியஸாக உள்ளார். தேவிக்கு உடலில் 40 சதவீத தீக்காயம் ஏற்பட்டுள்ளது. இருவருக்கும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.இது குறித்து போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தியதில் காரியாபட்டி அருகே உள்ள கல்குறிச்சி மணிநகரை சேர்ந்தவர் முத்து (60) என்பவர் இருவரையும் எரித்துக் கொல்ல முயன்றது தெரிய வந்தது. இதையடுத்து போலீசார் நேற்று இரவு முத்துவை கைது செய்தனர். விசாரணையில், 'பாண்டியராஜின் நண்பரான முத்து, கணவர் இறந்த பின் சாந்தியை தன்னுடன் சேர்ந்து வாழுமாறு வற்புறுத்தி வந்துள்ளார். இதற்கு அவர் மறுக்கவே ஆத்திரமடைந்த முத்து சம்பவத்தன்று வீட்டிற்கு சென்று இருவர் மீதும் மண்ணெண்ணெய் ஊற்றி எரித்து கொல்ல முயன்றது தெரிய வந்துள்ளது. இது தொடர்பாக போலீசார் மேலும், விசாரித்து வருகின்றனர்

## கர்நாடகாவில் யானை விழுந்ததில் சென்னையை சேர்ந்த இளம்பெண் பலி



கர்நாடகா: மே,19-

குடகு அருகே துபாரே யானைகள் முகாமில் யானைகள் குளிப்பதை பார்த்துக் கொண்டிருந்தபோது யானை மேலே விழுந்ததில் இளம்பெண் ஜூனேஸ்(33) உயிரிழந்தார். கர்நாடக மாநிலம் குடகு பகுதிக்கு சென்னையை சேர்ந்த பெண் ஜூனேஸ் சுற்றுலா சென்றபோது, யானை அவர் மேலே விழுந்ததில் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்



## வரும் 28ம் தேதி பக்ரீத் பண்டிகை: தமிழ்நாடு தலைமை காஜி அறிவிப்பு

சென்னை:மே,19-

பக்ரீத் பண்டிகை வருகிற 28ம் தேதி கொண்டாடப்படும் என்று தமிழக அரசின் தலைமை காஜி அறிவித்துள்ளார். இஸ்லாமிய ஐம்பெரும் கடமைகளில் ஒன்று புனித ஹஜ் பயணம் ஆகும். புனித மெக்காவுக்குச் சென்று வர சக்தியுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் வாழ்நாளில் ஒருமுறையாவது ஹஜ் பயணம் செல்ல விரும்புவார்கள். இஸ்லாமிய மாதமான துல்ஹஜ் மாதம் 10ம் நாள் இந்தக் கடமை நிறைவேறுகிறது. அதே நாளில் உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம்கள் பக்ரீத் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள்.

ஹஜ் கடமை நிறைவேறுவதால் இது 'ஹஜ்ஜுப் பெருநாள்' என்றும், இறைவனின் கட்டளைக்கு ஏற்ப தன் மகன் இஸ்மாயில் (அலை) அவர்களை அறுத்துப் பலியிட முயன்ற நபி இப்ராகிமின் (அலை) தியாகத்தை நினைவு கூரும் வகையில் 'தியாகத் திருநாள்' என்றும் அழைக்கப்படுகிறது. இந்த நிலையில் வரும் 28ம் தேதி பக்ரீத் பண்டிகை கொண்டாடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு அரசு தலைமை காஜி முஃப்தி உஸ்மான் முஹ்யித்தீன் பாகவி வெளியிட்டுள்ள அறிவிப்பில், ''துல்ஹஜ் மாதத்திற்கான பிறை தமிழகத்தில் தென்படாததால் இன்ஷா அல்லாஹ் செவ்வாய் கிழமை(நாளை) துல்ஹஜ் மாத முதல் பிறை என்று இஸ்லாமிய (ஷரீஅத்) முறைப்படி அறிவிக்கப்படுகிறது. ஈதுல் அழ்ஹா (பக்ரீத்) பெருநாள் வரும் 28ம் தேதி(வியாழக்கிழமை கொண்டாடப்படும்" என்று கூறப்பட்டுள்ளது.

இது குறித்து தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் மாநில தலைமையகம் வெளியிட்ட அறிவிப்பில், ''தமிழகத்தில் பிறை எங்கும் தென்படவில்லை. எனவே இன்று மஹ்ரிபில் இருந்து தமிழகத்தில் துல்ஹஜ் மாதம் ஆரம்பமாகின்றது. வரும் 27ம் தேதி(புதன்கிழமை) அரஃபா நோன்பு என்பதையும் 28ம் தேதி(வியாழக்கிழமை ஹஜ்) பெருநாள் என்பதையும் தெரியப்படுத்திக் கொள்கிறோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

## கஞ்சா வேட்டையில் சிறிய அளவிலான பறிமுதல் மட்டுமே ஏன்? திருத்தணி பொதுமக்கள் மத்தியில் எழும் பலத்த சந்தேகம்!



திருத்தணி.மே,19-

திருத்தணி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கடந்த இரண்டு ஆண்டுகளில் நடந்த பல்வேறு குற்றச் சம்பவங்களுக்குப் பின்னணியில் கஞ்சா போதை மிக முக்கியக் காரணமாக இருந்து வருகிறது. இதனால் பொதுமக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ள நிலையில், உள்ளூர் காவல்துறையினரின் கஞ்சா பறிமுதல் நடவடிக்கை பெரும் விவாதத்தைக் கிளப்பியுள்ளது. ஆந்திர மாநிலத்தில் இருந்து தமிழகத்திற்கு திருத்தணி வழியாக தான்பெரிய அளவில் கஞ்சா கடத்தி வரப்படுவதாக கூறப்படும் நிலையில், போலீசாரோ ஒவ்வொரு முறையும் 1 கிலோ, 1.5 கிலோ போன்ற சிறிய அளவிலேயே கஞ்சாவைப் பறிமுதல் செய்து கணக்குக் காட்டுவது ஏன் என்று சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் பகிரங்கமாக கேள்வி எழுப்பி, தங்கள் சந்தேகத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். இதற்கிடையில், திருத்தணி அருகே கஞ்சா விற்பனையில் ஈடுபட்டதாக 4 வாலிபர்களைப் போலீசார் கைது செய்து, அவர்களிடம் இருந்து ஒன்றரை கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்துள்ளனர். திருத்தணி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சரஸ்வதி நகர் பகுதியில் உள்ள ஒரு கோழி பண்ணை அருகே, சில நபர்கள் கஞ்சா விற்பனை செய்வதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இந்த தகவலின் பேரில், திருத்தணி காவல் ஆய்வாளர் திரு. சிவகுமார் அவர்கள் தலைமையில் போலீசார் சம்பவ இடத்திற்குச் சென்று அதிரடி சோதனை நடத்தினர். அப்போது அங்கு சந்தேகப்படும்படியாக நின்றிருந்த நான்கு பேரை பிடித்து விசாரித்தனர். லிவின் (20), த/பெ கிருஷ்ணன் (கார்த்திகேயபுரம்) சஞ்சய் (21), த/பெ திருமலை குமரன் (பெரியார் நகர்) கார்த்திக் (26), த/பெ பாபு (பெரியார் நகர்) சந்தோஷ் (20), த/பெ பழனி (பெரியார் நகர்) அவர்களிடம் நடத்திய சோதனையில், விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 1 கிலோ 500 கிராம் கஞ்சா கண்டறியப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டது. இதுகுறித்து திருத்தணி காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து, கைதான 4 வாலிபர்களையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.இந்த கைது நடவடிக்கை ஒருபுறம் இருந்தாலும், "பெரிய நெட்வொர்க்" மூலமாக நகருக்குள் வரும் கஞ்சாவின் மொத்த அளவோடு ஒப்பிடும்போது, இந்த 1.5 கிலோ பறிமுதல் என்பது மிகச் சிறியது என்கிறார்கள் உள்ளூர்வாசிகள்.

குற்றங்களின் உறைவிடமாக மாறும் கஞ்சா கும்பலின் பின்னணியில் உள்ள முக்கியப் புள்ளிகளை (Main Suppliers) பிடிக்காமல், சில்லறையை தனக்கு காண்பிப்பது. என்ற சந்தேகக் கணைகளை பொதுமக்கள் எழுப்பி வருகின்றனர்.

இனி மேலாவது மாவட்ட காவல் நிர்வாகம் தலையிட்டு, திருத்தணி பகுதியில் கஞ்சா நடமாட்டத்தை முற்றிலும் ஒழிக்க தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161